Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

# வருகை யின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

God is faithful for the past seventy years.

Vol. 70 சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார் சங்.25:9 டிசம்பர் 2024 No.12

## அறிக்கையிடுதல், தூய்மைப்படுத்துதல் மற்றும் கிறிஸ்துவுக்காக சமர்ப்பணம் செய்தல்

### Confession, Cleansing And Consecration to Christ

Ruth Paxon (1889 - 1949)

**"ஏன் என்னிடத்தில் ஆவியின் நிறைவு காணப்படவில்லை?"** இதற்கு முக்கிய இரண்டு காரணங்கள் சத்தியத்திலுண்டு. அதில் ஒன்று **அறிவீனம்**. **கிறிஸ்துவில்** தேவத்துவத்தின் பரிபூரணத்தையும், **ஆவியில்** இந்த பரிபூரணத்தை நமக்கு சொந்தமாக்குபவரையும் பெற்றிருக்கிறோம். ஆனால் தேவ வசனத்தின் அறிவீனத்தால் இந்த பரிபூரணத்தின் அனுபவத்தில் நாம் குறைவுபடுகிறோம்.

அடுத்த காரணம் **அவிசுவாசம்**. சத்தியத்தை புத்திபூர்வமாக உபதேச அடிப்படையிலும் அறிந்திருக்கிறோம். நமது இதயபூர்வமான அனுபவமாக அது மாறவில்லை, அல்லது நாம் அதை அறிந்தும் நமது அறிவை பயன்படுத்த பயந்து விசுவாசத்தால் அதை பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆதலால் அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்கக் கூடாமற் போனார்களென்று பார்க்கிறோம். *(எபி.3:19)*

### பாவம்

அனுபவத்தில் இதற்கு இரு காரணங்களைக் கூறலாம். முதலாவது அறிக்கையிடப்படாத பாவம். தூய ஆவியானவர் மிகவும் பரிசுத்தமானவர். அவர் வாழுமிடம் தூய்மையுடன் காக்கப்பட வேண்டும். அவர் நம்மை நிரப்ப இருதயத்தில் அறியப்பட்ட எல்லா பாவமும் அகற்றப்பட்டு சுத்தப்படுத்தப்பட வேண்டும். அறிந்ததும் துணிகரமானதுமான பாவங்கள் வாழ்விலிருந்தால் தூய ஆவியானவரின் நிரப்புதலைப் பெற முடியாது.

எசேக்கியா ராஜாவின் நாட்களில் தேவாலயம் அற்புதமாக சுத்திகரிக்கப்பட்டது 2 நாளா 29-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. அது தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் சுத்திகரிப்புக்கு மாதிரியாயிருக்கிறது. "லேவியரே கேளுங்கள், நீங்கள் இப்போது உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொண்டு, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தைப் பரிசுத்தம் பண்ணி, அசுத்தமானதைப் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியே கொண்டு போங்கள்." *(2 நாளா.29:5)*

"ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்தைச் சுத்திகரிக்கும்படி உட்புறத்திலே பிரவேசித்து, கர்த்தருடைய ஆலயத்தில் கண்ட சகல அசுத்தத்தையும் வெளியே ..கொண்டு போனார்கள். முதல் மாதம் முதல் தேதியிலே அவர்கள் பரிசுத்தம் பண்ணத் துவங்கி, எட்டு நாளில் பரிசுத்தம் பண்ணி, முதலாம் மாதம் பதினாறாம் தேதியிலே அதை முடித்தார்கள்." *(2 நாளா.29:16-17)*

'அசுத்தம்' என்ற பதத்தை கவனித்தீர்களா? தேவன் பாவத்தைக் குறித்து கூறும் போது மிருதுவான அல்லது கற்பனையான பதங்களை உபயோகிப்பதில்லை. மாறாக 'அசுத்தம்' தூய்மையான இடத்திலிருந்து அகற்றப்பட வேண்டும் என்றும் கூறப்படுகிறது. ராஜா ஆலயத்திலிருந்து கட்டாயமாக இந்த அசுத்தங்களை அகற்ற இந்த பரிசுத்த ஸ்தலத்திலே எப்படி அசுத்தங்கள் குவிந்தன? அவர்கள் வெளிப்பிரகாரத்தை மட்டும் தூய்மைப்படுத்தி விட்டு நிறுத்திவிடவில்லை. அவர்கள் தேவாலயத்தின் உட்புறத்திலும் சென்று தூய்மைப்படுத்தினார்கள். அவர்கள் அசுத்தங்களைக் கண்டு பிடித்தது மட்டுமல்ல அவைகளை வெளியே கொண்டு வந்தார்கள். சில அசுத்தங்களை மட்டுமல்ல தாங்கள் **'கண்ட எல்லா அசுத்தங்களையும்'** வெளியே கொண்டு வந்தார்கள். அது பூர்த்தியான ஒரு தூய்மைப்படுத்துதலாயிருந்தது. அது எவ்வளவு காலம் பிடித்தது? சரியாக எட்டு நாட்கள் அகற்றுவதற்கு. எத்தனை பெரிய அளவான அசுத்தங்கள்! ஆனால் அவர்கள் விடாமுயற்சியுடன் அவற்றை முழுவதுமாக அகற்றி விட்டார்கள்.

இதற்கு இணையான ஒரு சம்பவத்தை புதிய ஏற்பாட்டிலிருந்து பார்ப்போம். இரண்டிலும் போதனையில் ஒருமை இருப்பது போல சில பதங்களும் ஒருமைப்பட்டிருப்பதைக் காணலாம். **"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாமலிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனைத் தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்."** *(1 கொரி. 3:16-17)*

"..மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மை சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாகுதலைத் தேவ பயத்தோடே பூரணப் படுத்தக் கடவோம்." *(2 கொரி.7:1)*

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள்" தேவனுடைய ஆலயம் பரிசுத்தமானது. எனவே அதில் அசுத்தங்கள் எல்லாம் அகற்றப்பட வேண்டியது அவசியம். மாம்சத்திலும் ஆவியிலுமுள்ள அசுத்தங்கள் அகற்றப்பட வேண்டும்.

ஒரு வேளை முட்டாள்தனமான, இழிவான, புலன்சம்பந்தமான பாவங்களைக் கடந்த காலங்களிலே செய்திருக்கலாம். அந்தப் பாவங்களை இப்போது விட்டிருக்கலாம், ஆனால் அவை இப்போது நமது ஆழமான ஆவியை அசுத்தப்படுத்திக் கொண்டிருக்கின்றனவே. முன்பு பொய் சொல்லியிருக்கிறோம், ஆனால் இப்போது மாய்மாலம், ஏமாற்றுதல், மாறுபாடான நடத்தைகள் இருக்கிறதே. நமது கிறிஸ்தவ அனுபவத்திலும் கிறிஸ்துவை நாம் அறிவித்தாலும் அவர் நமக்குச் சொந்தமானவராக இல்லையே.

முன்பு நாம் அடிக்கடி முற்கோபங்கொள்ளுகிறவர்களாயிருந்தோம். இப்போது வெளிப்படையாக அதிகக் கோபத்தை வெளிப்படுத்தவில்லை ஆனால் ஆவியில் எத்தனை எரிச்சல், பொறுமைக்கேடு காணப்படுகிறது? முன்பு வெளிப்படையாக ஒருவரை வெறுப்புடன் பேசினோம். இப்போது இன்னும் இருதயத்தின் மூலையில் பொறாமை, எரிச்சல் ஆகியவை ஒளிந்து காணப்படுகிறதே. முன்பு நாம் சண்டையிடுகிறவர்களாக இருந்தோம், இப்போது விரும்பாதவர்களைக் கண்டால் ரஸ்தாவின் மறுஓரமாக விலகிச் செல்கிறோம். நாம் வெற்றியுள்ள கிறிஸ்தவர்கள், நாம் கழுகப்பட... வேண்டியதில்லை என்று எண்ணிக் கொள்ளுகிறோம்.

ஒரு முறை மிஷன் களத்திலுள்ள ஒரு பெண்கள் பள்ளியில் தொடர் கூடுகைகள் நடத்தச் சென்றிருந்தேன். ஒரு மிஷனெறி என்னிடம் வந்து "இந்தக் கூடுகைகள் நடக்கும்போது தனிப்பட்ட எந்த வேலையும் இந்தப் பெண் பிள்ளைகள் மத்தியில் செய்ய என்னிடம் கூறக்கூடாது. நான் செய்ய மாட்டேன்" என்றாள். தொடர்ந்து "நான் விடுமுறைக்காக வீடு செல்கிறேன். நான் திரும்பிவருவதில்லை என்று என் உடன் ஊழியர்களிடம் சொல்லிவிட்டேன். என் உடம்பின் நிலை நன்றாயில்லை" என்று கூறினாள். அவளது சுகம் குறைந்துக் கொண்டே வந்தது உண்மைதான். ஆனால் அந்த பலவீனத்துக்குக் காரணம் உடலைப் பொறுத்த தல்ல ஆவிக்குரிய நிலை குறித்தது.

*(5-ம் பக்கம் பார்க்க)*

# வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony


## 2025 எழுப்புதலுக்காக ஜெபிக்கும் ஆண்டு

**உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?** சங்.85:6.

Wilt thou not revive us again; that thy people may rejoice in thee? Ps.85:6.

நீங்கள் சம்பூரணமாய்ச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப் போவதில்லை யோவேல் 2:26.

### ஆசிரியர் கடிதம்

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,**

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

### வாசகர் கடிதம்

CN 00185 S

Dear "Brother in Christ"

Herewith Iam sending Rs.1000/- for the magazine Varukayin Thoothan for 2 yrs. 2024 - 2026. The messages and Promising verses encourage and keep me happy. May God bless your ministry.

Yours sincerely,
July 2024 சகோதரி **A.A.**

**கிறிஸ்துவில் மதிப்பிற்குரிய அண்ணன் அவர்களுக்கு! ஸ்தோத்திரம்.**

தேவ கிருபையால் தங்களின் பூரண சுகத்திற்காக ஜெபித்து வருகின்றோம்.

தூதன் இதழுக்காக 1000-ம் அனுப்பியுள்ளேன். கர்த்தரின் கரம் நம்மை பெலத்துடன் வழிநடத்தி ஆசீர்வதிக்கும். நன்றி.

இறைபணியில்,
சாது, பாளையங்கோட்டை, TN 02039 S

* * * * * *

ஆண்டு முழுவதும் ஆண்டவருடைய பிள்ளைகள் ஆன்லைன், காசோலை, மணியாடர் வழியாக அனுப்பிய அனைத்து காணிக்கைகளுக்காகவும் ஆண்டவரை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன், அவர் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

தேவனுடைய வசனம் இவ்வாறு கூறுகிறது: "ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்த வான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே" எபிரேயர் 6:10.

எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும் சங். 121:1,2.

**2024 டிசம்பர்** மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், '*வெகுமனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்*' துதிக்கிறேன். 2024 ஜனவரி முதல் டிசம்பர் வரை **12 மாதங்கள்** பத்திரிகை அச்சிட்டு அனுப்பியுள்ளோம். உங்களுக்கு பத்திரிகை வர தவறியிருந்தால் தயவாய் தெரிவியுங்கள், உடனே அனுப்பிவைப்போம்.

**2024 கர்த்தருக்கு முன்பாக உண்மையும் உத்தமுமாய் நடக்கும் ஆண்டு**
I have walked before thee in truth and with a perfect heart. Isa.38:3

### ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தை எங்கள் மேல் போடும். சபைகளின் நிர்பந்த நிலைமையைக் குறித்த தரிசனத்தை எங்களுக்குத் தாரும். ஜெபத்தில் எங்களுக்கு ஆத்திரத்தை அளியும். நித்திரையை எங்கள் கண்களுக்கு தூரமாக்கும். அசட்டையை எங்களை விட்டகற்றி கண்ணீரையும் பெருமூச்சையும் தாரும். பிதாவின் வலது பாரிசத்திலிருந்து வேண்டிக் கொண்டிருக்கிறவரே, ஜெபியாத பாவிகளாகிய எங்கள் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவி யையும் பொழிந்தருளும், ஆமென். ரோ.8:26; எபி.5:7; சகரியா12:10.

இம்மாதம் உங்கள் தியானத்திற்காக 3 குறிப்புகளை கீழே எழுதுகிறேன்.

## I *நீங்கள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களா?*

## Are you sitting at the feet of the Lord?

பின்பு, அவர்கள் பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார், அங்கே மார்த்தாள் என்னும் பேர் கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக் கொண்டாள்.

அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள் லூக்கா 10:38,39.

Personal Prayer, Bible Reading, தனி ஜெபம், வேத வசன தியானம். "*அவர் அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போய், அங்கே ஜெபம் பண்ணினார்*" மாற்கு 1:35.

நீங்கள் குடும்பமாக ஜெபிக்கிறீர்கள். உங்களுக்காக, பிள்ளைகளுக்காக, படிப்பிற்காக, வேலைக்காக, திருமணத்திற்காக, உங்கள் தேவைகளுக்காக, சரீர சுகத்திற்காக ஜெபிக்கிறீர்கள். எல்லா ஊழியங்களுக்காகவும் ஜெபிக்கிறீர்கள். **தனித்து ஜெபிக்கிறீர்களா?**

**பரிசுத்த வேதாகமம் ஒரு தேன் கூடு.** '*லூக்கா சுவிசேஷம் தேன் இட்ட பணியாரம்*' என்றெழுதினார் ஒரு தேவ மனிதர்.

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது.

*(3-ம் பக்கம் பார்க்க)*

**ஆண்டு காணிக்கை ரூபாய் 500**


**கடிதம், மணியாடர், கொரியர்** அனுப்ப வேண்டிய முகவரி:

**வருகையின் தூதன்**
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
**Ph. :** 95432 21008

**VARUKAYIN THOOTHAN**
Newport Street,
Nagercoil-629 001.
**Ph. :** 95432 21008

**காசோலை** *(Cheque & Draft)*
**வெஸ்லி தேவதாசன்** (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

**வருகையின் தூதன் பத்திரிகை பணி**
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

**வருகையின் தூதன் உபவாச ஊழியம்**
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

**வருகையின் தூதன் முன்னேற்றப்பணி**
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும் என்றைக்கும் நிலைக்கிறது மாயிருக்கிறது; கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது.

அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப் படத்தக்கதும், ***தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது*** சங்.19:7-10.

மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, லூக்கா 10:10. இயேசுவின் பாதத்தில் அமர்ந்து. அவருடைய வசனத்தைத் தியானிக்க முடியாத அளவு வேலையா? படிப்பா? தொழிலா? இயேசுவின் பாதம் தான் முக்கியம். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், ***அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்*** என்றார் இயேசு மத்.6:33.

## II *நீங்கள் தேவனோடு நடக்கிறீர்களா?*
## Are you walking with the Lord?

ஏனோக்கு மெத்தூசலாவைப் பெற்றபின், முந்நூறு வருஷம் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார் ஆதி.5:22-24.

And Enoch walked with God; and he was not; for God took him.

அன்றையத்தினமே அவர்களில் இரண்டு பேர் எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டுமைல் தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போனார்கள்.

இப்படி அவர்கள் பேசி, சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், இயேசுதாமே சேர்ந்து அவர்களுடனே கூட நடந்து போனார்.

அந்த சம்பவம் இவ்வாறு முடிகிறது:

அப்பொழுது அவர்கள் ஒருவரையெருவர் நோக்கி: வழியிலே அவர் நம்முடனே பேசி, வேத வாக்கியங்களை நமக்கு விளங்கக் காட்டின பொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்து விட்டு எரியவில்லையா என்று சொல்லிக்கொண்டு,

அந்நேரமே எழுந்திருந்து, எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள் லூக்கா 24:13-33.

நீங்கள் தேவனோடு நடக்கிறீர்களா? உங்கள் சபை போதகரோடு, சபை விசுவாசிகளோடு நடக்கிறீர்களா? உங்கள் சபையில் நடக்கும் ஆராதனை, வீட்டுக்கூட்டம், உபவாச ஜெபம் எல்லாவற்றிலும் ஆர்வமாய் கலந்து கொள்கிறீர்களா?

## III *நீங்கள் தேவனுக்கு முன்பாக நிற்கிறீர்களா?*
## Are you standing before the Lord?

பின்பு அவர் என் காதுகள் கேட்க மகா சத்தமாய்: நகரத்தின் விசாரிப்புக்காரர் சங்கரிக்கும் ஆயுதங்களைத் தங்கள் கைகளில் பிடித்துக் கொண்டு வரக்கடவர்கள் என்று சொன்னார்.

அப்பொழுது இதோ, ஆறு புருஷர் வெட்டுகிற ஆயுதங்களைத் தங்கள் கைகளில் பிடித்துக் கொண்டு, வடக்கே பார்த்த உயர்ந்த வாசலின் வழியிலிருந்து வந்தார்கள்; அவர்களில் சணல் நூல் அங்கி தரித்து, தன் அரையில் கணக்கனுடைய மைக் கூட்டை வைத்திருக்கிற ஒருவன் இருந்தான்; அவர்கள் உள்ளே பிரவேசித்து, வெண்கல பலிபீடத்தண்டையிலே நின்றார்கள்.

அப்பொழுது இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கேருபீன் மேலிருந்தெழும்பி, ஆலயத்தின் வாசற்படியிலே வந்து, சணல் நூல் அங்கி தரித்து, தன் அரையிலே கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற புருஷனைக் கூப்பிட்டு,

**கர்த்தர் அவனை நோக்கி:** ***நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு என்றார்*** எசேக்கியேல் 9:1-4.

### 1. விக்கிரக ஆராதனை அருவருப்பு

இதோ, பலிபீடத்தின் வாசலுக்கு வடக்கே பார்த்தேன்; நடையிலே எரிச்சலுண்டாக்குகிற அந்த விக்கிரகம் இருந்தது.

அவர் என்னை நோக்கி: ... இஸ்ரவேல் வம்சத்தார் இங்கே செய்கிற மிகுந்த அருவருப்புகளைக் காண்கிறாய் அல்லவா? இதிலும் அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று சொல்லி,

அவர் என்னைப் பார்த்து: நீ உள்ளே போய், அவர்கள் இங்கே செய்கிற கொடிய அருவருப்புகளைப் பார் என்றார்.

நான் உள்ளே போய்ப் பார்த்த போது, இதோ சகலவித ஊரும் பிராணிகளும் அருவருப்பான மிருகங்களாகிய இவைகளின் சுரூபங்களும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய நரகலான சகல விக்கிரகங்களும் சுவரில் சுற்றிலும் சித்திரந்தீரப்பட்டிருந்தன.

... இதோ, அங்கே தம்மூசுக்காக அழுது கொண்டிருக்கிற ஸ்திரீகள் உட்கார்ந்திருந்தார்கள்.

என்னைக் கர்த்தருடைய ஆலயத்தின் உட்பிராகாரத்திலே கொண்டு போனார்; இதோ, கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நடையிலே மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே, ஏறக்குறைய இருபத்தைந்து புருஷர், தங்கள் முதுகைக் கர்த்தருடைய ஆலயத்துக்கும் தங்கள் முகத்தைக் கீழ்த் திசைக்கும் நேராகத் திருப்பினவர்களாய்க் கிழக்கே இருக்கும் சூரியனை நமஸ்கரித்தார்கள் எசேக்.8:5-16.

### 2. தகாத உறவு அருவருப்பு

தகப்பனை நிர்வாணமாக்கின வர்கள் உன்னில் இருக்கிறார்கள்; தூர ஸ்திரீயைப் பலவந்தப்படுத்தினவர்கள் உன்னில் இருக்கிறார்கள்.

உன்னில் ஒருவன் தன் அயலானுடைய மனைவியோடே அருவருப்பானதைச் செய்கிறான்; வேறொருவன் முறைகேடாய்த் தன் மருமகளைத் தீட்டுப்படுத்துகிறான்; வேறொருவன் தன் தகப்பனுக்குப் பிறந்த தன் சகோதரியைப் பலவந்தம் பண்ணுகிறான் எசேக்.22:10,11.

### 3. சுபாவத்துக்கு விரோதமான அநுபோகம் அருவருப்பு

இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள்.

அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள் ரோமர் 1:26,27.

சமீபகாலமாக தேவனுடைய ஆலயத்தில், பரிசுத்த ஆராதனைக்கு பதிலாக சினிமா பாடல்களை பாடுவதும், சினிமா போல வாலிப ஆண்களும் பெண்களும் சேர்ந்து, தங்கள் சரீரங்களை அசைத்து ஆடுவதும் அதிக அருவருப்பு.

மேலை நாட்டு தேவ ஊழியர் ஒருவர் வெளியிட்டிருந்த வீடியோவை பார்த்தேன். ஆராதனை வேளையில், மேலைநாட்டினர் இது போல ஆடுவதை அவர் காண்பித்தார். அந்த தேவ ஊழியர் ஆங்கிலத்தில் மிகுந்த வேதனையோடு ***இது யேசபேலின் ஆவி*** என்று கூறினார்.

"ஆகிலும், உன் பேரில் எனக்குக் குறை உண்டு; என்னவெனில், தன்னைத் ***தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல்*** என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, ***அவர்களை வஞ்சிக்கும்படி*** நீ அவர்களுக்கு இடம் கொடுக்கிறாய்.

அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணைக் கொடுத்தேன்; தன் வேசி மார்க்கத்தை விட்டுமனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை" வெளி.2:20,21.

(4-ம் பக்கம் பார்க்க)

"அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கும் தேசம், வருஷத்தின் துவக்க முதல் வருஷத்தின் முடிவு மட்டும் ஏப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின் மேல் வைக்கப்பட்டிருக்கும்." உபாகமம் 11:12.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

### பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம்

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் ரோமர் 8:26.

பின்பு அவர் என் காதுகள் கேட்க மற்றவர்களை நோக்கி: நீங்கள் அவன் பின்னாலே நகரமெங்கும் உருவப்போய் வெட்டுங்கள்; உங்கள் கண் தப்பவிடாமலும், நீங்கள் இரங்காமலும்,

முதியோரையும், வாலிபரையும், கன்னிகைகளையும், குழந்தைகளையும், ஸ்திரீகளையும் சங்கரித்துக் கொன்று போடுங்கள்; ***அடையாளம் போடப்பட்டிருக்கிற ஒருவனையும் கிட்டாதிருங்கள், என் பரிசுத்த ஸ்தலத்திலே துவக்குங்கள்*** என்று என் காதுகள் கேட்கச் சொன்னார்; அப்பொழுது அவர்கள் ஆலயத்துக்கு முன்னே இருந்த மூப்பரிடத்தில் துவக்கம் பண்ணினார்கள்.

அவர் அவனை நோக்கி: நீங்கள் ஆலயத்தைத் தீட்டுப்படுத்தி, பிரகாரங்களைக் கொலையுண்டவர்களாலே நிரப்பி, புறப்பட்டுப் போங்கள் என்றார்; அவர்கள் நகரத்தில் போய் வெட்டினார்கள் எசேக். 9:5-7.

நியாயத்தீர்ப்பின் நாள் நெருங்குதே
நேரம் வர காலமாகுதே
மாய லோகம் நம்பி மாண்டிடும்
மானிடரை மீட்க மாட்டீரோ

தேவனே நீர் பெரியவர்! தேவனே நீர் பரிசுத்தர்!
தேவனே நீர் வல்லவர்! தேவனே நீர் நல்லவர்!

இந்தியாவில் வாழும் எம் ஜனம்
இன்ப இயேசு அன்பைக் கண்டிட
நூற்று நாற்பது கோடி பேரிலும்
அன்பின் ஆவி மாரி ஊற்றுமே

இயேசுவே நீர் பெரியவர்! இயேசுவே நிர் பரிசுத்தர்!
இயேசுவே நீர் வல்லவர்! இயேசுவே நீர் நல்லவர்!

**அவர்கள் வெட்டிக் கொண்டு போகையில் நான் மாத்திரம் தனித்து, முகங்குப்புற விழுந்து: ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் எருசலேமின் மேல் உமது உக்கிரத்தை ஊற்றுகையில் இஸ்ரவேலின் மீதியானவர்களையெல்லாம் அழிப்பீரோ என்று முறையிட்டேன்** எசேக். 9:8.

And it came to pass, while they were slaying them, and I was left, that I fell upon my face, and cried, and said, Ah Lord God! wilt thou destroy all the residue of Israel in thy pouring out of thy fury upon Jerusalem?

எசேக்கியேல் தீர்க்கனைப் போல நீங்களும் தனித்து, முகங்குப்புற விழுந்து, தேசத்தை அழிப்பீரோ என்று கதறுவீர்களா?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
**வெஸ்லி தேவதாசன்**
(WESLEY DEVADASON)

அலுவலகம் : **95432 21008**
உதவி : **94897 40295**

### 2025-ம் ஆண்டு

**ஜனவரி** : **2025-ம் ஆண்டு உங்களுக்கு அதிக ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவருடைய ஆலோசனைகள்**

**பெப்ரவரி** : **இரட்சிப்பு என்றால் என்ன?**

**மார்ச்** : **இரட்சிக்கப்படுகிறவர்கள் சில பேர் தானோ?**

**ஏப்ரல்** : **வேத புத்தகத்தில் அழுத ஏழு பேர்**

**மேய்** : **7 விதமான அக்கினி!**

**ஜூன்** : **இயேசுவைப் போல் ஜீவிப்பது**
**இயேசுவைப் போல் பிரசங்கிப்பது**
**இயேசுவைப் போல் ஜெபிப்பது**

**ஜூலை** : **தாவீதின் தாகம்**

**ஆகஸ்ட்** : **தாவீதின் பாவம்**

**செப்டம்பர்** : **திறப்பிலே நின்ற பினெகாஸ்**

**அக்டோபர்** : **தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்**

**நவம்பர்** : **நான் காணிக்கை வாங்குகிறதில்லை என்று சொன்ன தீர்க்கதரிசி**

**டிசம்பர்** : **என் தேவன் சொல்வதையே சொல்வேன் என்று சொன்ன தீர்க்கதரிசி**

### முக்கிய அறிவிப்பு

**காணிக்கை அனுப்பும் போது உங்கள் முழு முகவரியையும், மொபைல் எண்ணையும், பெயருக்கு மேல் அச்சிடப்பட்டுள்ள உங்கள் பத்திரிகை பதிவு எண்ணையும் தயவாய் எழுதுங்கள்.**

### அன்பான வாசகர்களின் கவனத்திற்கு

இந்த ஆண்டும் வாசகரில் சிலர் ரூபாய் 100, 150, 200 என்று அனுப்பியிருக்கிறீர்கள். சில பெயர்களுக்கு முன்னால் Dr. என்றும், பின்னால் Tr., H.M., P.M., R.T.O என்றும் இருக்கிறது.

புதிய ஆண்டு *புதிய முகவரி பட்டியல்* கணணியில் பதிவு செய்கிறோம். 2025-ம் ஆண்டு உங்களுக்கு பத்திரிகை அனுப்ப ரூ 500 அனுப்புங்கள்.

***ஆசிரியர்***

# கிறிஸ்து எப்போதும் நம்மோடிருக்கிறார்

## Christ is with us Always

Octavius Winslow (1808 - 1878)

"இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்" (மத்.28:20).

கிறிஸ்துவின் தெய்வத்துவத்துக் குரிய ஒரு பண்பு அவர் சர்வ வியாபி. எவ்வளவு ஆறுதலான சிந்தனை! அவர் தமது பிள்ளைகளோடு எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் எல்லா சூழல்களிலும் கூடவே இருப்பவர். "தேவன் நம்மோடு இருக்கிறார்" அவர் தமது பிள்ளைகளின் துக்கத்தில் அவர்களை ஆறுதல்படுத்தவும், இருளின் காலங்களில் ஒளிர்விக்கவும், சந்தேகமும் திகைப்புமான வேளைகளில் வழிநடத்தவும், சச்சரவு காலங்களில் விடுவிக்கவும், மரண வேளையில் ஆதரவு தரவும் கூடியவர். இதை உணர்ந்து கொள்ளுவதற்கு விசுவாசம் வேண்டும். சாத்ராக், மேஷாக், ஆபெத்னெகோ என்ற மூவரையும் அவர்களது உத்தமத்தால் பயங்கர அக்கினிச்சூளையிலிருந்து விடுவித்தார். தானியேலுடன் சிங்கக் குகையிலிருந்து சிங்கங்களின் வாய்களைக் கட்டிப் போட்டார். பெத்தேலில் யாக்கோபின் போராட்டத்திலிருந்தார். பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்ட யோவானோடு இருந்தார். அவர் எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும், எல்லா சூழல்களிலும் அவரது அருமையான ஜனங்களோடு இருப்பவர்.

வாசகரே, நீங்கள் துக்கத்தோடிருக்கும் பிள்ளைகளா? துன்பப்படுத்தப்படுகிற ஒரு மகனாக மகளாக இருக்கிறீர்களா? எரிகிற அக்கினிச்சூளையின் அனுபவத்தில் கடந்து செல்கிறீர்களா? எதிரிடையான சம்பவங்களின் கசப்பான பாத்திரத்தை குடிக்கிறீர்களா? உடன்படிக்கையின் பிரம்பு உங்கள் மேல் பாரமாயிருக்கிறதா? நண்பர்கள் இரக்கமற்றும், உலகமே வெறுமையாகவும், பூமிக்குரியவையெல்லாம் மாறிப் போகிறவைகளாகவும், விசுவாசம் பெலவீனமாகவும், சீர்கேடுகள் உறுதியாகவும் இருக்கின்றனவா? உங்கள் பாத்திரம் கசப்பினால் நிரம்புகிறதா? பிதா உங்களை விட்டு தமது முகத்தை மறைத்துக் கொண்டாரா? எனினும் சர்வ வியாபியாகிய இயேசு உங்களோடிருக்கிறார். அக்கினிச்சூளை அழுக்குகளை அகற்றவும் தங்கத்தை பரிசுத்தம் பண்ணவுமே. இந்த வேதனையான அனுபவங்கள் மூலம் திருப்திப்படுத்தாத உலகிலிருந்து இயேசுவுக்கு மிக மிக அருகாகவும் இழுத்துக் கொள்ளப்படுகிறீர்கள். நீங்கள் சந்தோஷப்பட்டு களிகூருங்கள். அவர் உங்களை விட்டு விலகுவதில்லை என வாக்குப் பண்ணியிருக்கிறார். "...நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னை கை விடுவதுமில்லை, என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம் தைரியம் கொண்டு; கர்த்தர் எனக்குச் சகாயர் நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே" (எபி.13:5-6).

★ ★ ★

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் வேதத்திலிருந்து வெற்றியைக் குறித்த வசனங்களைக் கூறினேன். அவையெல்லாவற்றையும் அவள் மனப்பாடமாகக் கூறினாள். வெற்றியைக் குறித்த சில புத்தகங்களைக் குறிப்பிட்டேன். அவள் அவைகளைக் குறித்து தெரிந்தும் சிலவற்றைப் படித்தும் இருந்தாள். வெற்றியின் உபதேசமும், சொற்களின் பாங்கும் அவளுக்கு மிகவும் அறிமுகமாயிருந்தன. ஆனால் அவளுக்கு வெற்றி கிடைக்கவில்லை. அவளது மாம்சத்தில் பாவங்கள் படிந்திருந்ததா என்று நீங்கள் கேட்கலாம். இல்லவே இல்லை ஆனால் அவளது உள்ளத்தில் ஏற்பட்ட ஒரு காயத்தை இருதயத்தின் ஆழத்தில் நான்கு ஆண்டுகளுக்கு முன்னதாக வைத்துக்கொண்டாள்.அது பராமரிக்கப்பட்டு இறுதியில் அவளது இருதய சமாதானம், வேதவாசிப்பின் மகிழ்ச்சி, ஜெபம், ஆத்தும பாரம் எல்லாவற்றையும் திருடிக்கொண்டது. அது இறுதியாக சரீர வியாதியைக் கொண்டு வந்து அதனால் மிஷன் களத்துக்குத் திரும்பி வராத நிலையை ஏற்படுத்திவிட்டது. ஒரு சிறு காயம் மனித இருதயத்தில் மறைத்து வைக்கப்படும் போது எத்தகைய தீங்கைக் கொண்டு வருகிறது!

உங்கள் ஆவியின் அடித்தளத்தில் இப்படி ஏதேனும் இருக்கிறதா? அப்படியானால் இன்றே அதை அப்புறப்படுத்தி விட்டு சுத்தமாக்கிவிடுங்கள். அந்த மிஷனெறி உணர்த்தப்பட்டு அந்தக் காயத்தை அகற்றிவிட்டு இருமுறை விடுப்புக்குச் சென்று விட்டு மிஷனெறி களத்துக்கு வந்து விட்டார்கள்.

சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் ஒரு நரைமயிருடைய மனிதன் ஒரு பாவ அறிக்கை செய்தார். ஒரு கூடுகையின் இறுதியில் அவர் 27 ஆண்டுகள் தமது உறவினர்களோடு தொடர்பே இல்லாமல் இருந்திருக்கிறார். பல வருடங்கள் அவர் தூக்கமின்மையால் அவதிப்பட்டுள்ளார். அதே இரவில் அவரது பாவ அறிக்கைக்குப் பின் அவர் ஒரு குழந்தை போல தூங்கியிருக்கிறார். அடுத்த ஓய்வு நாளில் ஆலயத்தில் அவர் தாம் 27 ஆண்டுகளாக அனுபவிக்காத இருதய சமாதானத்தை மூன்று நாட்களாக அனுபவித்துக் கொண்டிருப்பதை சாட்சியாகக் கூறியிருக்கிறார்: "நம் முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." ( 1 யோவா.1:9) "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்" (நீதி.28:13).

ஒரு சிறு துளி கோபம், அன்பின்மை, கிறிஸ்துவைப் போல பிறரைப் பார்க்க முடியாத தன்மை இருந்தால் கூட ஆவியானவர் நம்மை நிரப்பும்படியாகக் கேட்பது முட்டாள் தனமும் வியர்த்தமுமாகும். நாம் வீணாக ஜெபிக்கிறவர்களாக ஆகிவிடுவோம். நீங்கள் மாம்சத்திலும் ஆவியிலுமுள்ள எல்லா அழுக்குகளையும் வெளியேற்ற விரும்புகிறீர்களா? சுத்தப்படுத்துவது நிரப்பப்படுவதல்ல, அது நிரப்பப்படுவதற்கான தடையை நீக்கி நிரப்பப்பட நம்மை ஆயத்தப்படுத்துகிறது.

### அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்வு

நிரப்பப்படுவதற்கு தடையாக இருக்கும் இரண்டாவது காரணம் அர்ப்பணிக்கப்படாத வாழ்வு. அதாவது சிலுவையிலறையப்படாததும் கட்டுப்படுத்தப்படாத சுயமும் ஆகும். நாம் நிரப்பப்பட கிறிஸ்துவின் கர்த்தத்துவத்திற்கு நம்மை முற்றிலும் அர்ப்பணிக்க வேண்டும். இதற்கு இட ஒதுக்கீடு மற்றும் கதவுகள் அடைக்கப்படுதல் கூடாது. கிறிஸ்துவை ஆதாரமாகக் கொள்ளாத எல்லாவற்றிலுமிருந்து நாம் பிரிக்கப்பட வேண்டும். எல்லாவற்றையும் கிறிஸ்துவின் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும். சுயத்தை முற்றிலுமகற்றி கிறிஸ்துவை இருதய சிங்காசனத்தில் அமரவைக்க வேண்டும்.

எசேக்கியா தேவாலயத்தை சுத்திகரித்த பின்பு தங்களையும் சுத்திகரித்துக் கொண்டு தங்கள் பலிகளையும் நன்றி காணிக்கைகளையும் அர்ப்பணித்தார்கள் . "அதன்பின்பு எசேக்கியா, இப்போதும் நீங்கள் கர்த்தருக்கென்று உங்களைப் பரிசுத்தம் பண்ணினீர்கள், ஆகையால் கிட்ட வந்து கர்த்தருடைய ஆலயத்திற்குத் தகனபலிகளையும், ஸ்தோத்திர பலிகளையும் கொண்டு வாருங்கள் என்றான். அப்பொழுது சபையார் தகனபலிகளையும், ஸ்தோத்திர பலிகளையும், இஷ்டமுள்ளவர்களெல்லாம் சர்வாங்க தகனபலிகளையும் கொண்டுவந்தார்கள்." (2 நாளா.29:31) அசுத்தங்களெல்லாம் வெளியே கொண்டு போகப்பட்ட பின்பு காணிக்கைகள் உள்ளே கொண்டு வரப்பட்டன.

தேவனுடைய பரிசுத்த ஆலயமாயிருக்கிற ஒவ்வொருவருடைய வாழ்விலும் இந்த ஒழுங்கின்படிதான் சுத்தமாக்கப்படுதலும் அர்ப்பணமும் நடைபெறுகிறது. பரிசுத்தத்தின் பரிபூரணம் மாம்சத்திலும் ஆவியிலுமுள்ள அனைத்து அசுத்தங்களெல்லாம் அகற்றப்பட்ட பின்புதான் ஏற்பட முடியும். இதற்காக நமது சரீரங்கள் ஜீவனுள்ள பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டு அவர் அதை முற்றிலும் சொந்தமாக்கி அவரது ஆளுகைக்குள் கொண்டு வர வேண்டும். "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ளஆராதனை" (ரோமர்.12:1) "பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படிக்கு, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்று நிதானிக்கிறோம்" (2கொரி.5:15).

கிறிஸ்துவுக்கு நம்மை அர்ப்பணிப்பது என்பது வாழ்வின் அனைத்து பகுதிகளையும் கிறிஸ்துவுக்கு, அவர் நிரப்பும்படி திறந்து அளிப்பதாகும். எதற்காக நாம் திறந்தளிக்கிறோமோ அதுவே நம்மை நிரப்பும். எந்த அளவுக்கு இருதயத்தை சாத்தானுக்கு, உலகத்துக்கு அல்லது மாம்சத்துக்கு திறந்தளிக்கிறோமோ அந்த அளவாக அவை நம் இருதயத்தை நிரப்பும். ஆனால் நான் ஒவ்வொரு கதவையும் ஆவியான வருக்கும் வசனத்துக்கும் திறந்தளித்தால் அவை நம் மனதையும், இருதயத்தையும் ஆவியையும் நிரப்பும்.

ஒப்புவிப்பது என்பது நிரப்புவது அல்ல. அது ஆயத்தம் மட்டுமே. வெறுமையாக்குதல் நிரப்புவதற்கு ஆயத்தமாக்கும் நிலை. ஒப்புவிக்கப்பட்ட வாழ்வு மட்டுமே ஆவியினால் நிரப்பப்பட முடியும். நீங்கள் உங்கள் வாழ்வை ஆண்டவராகிய இயேசுவுக்கு ஒப்படைத்து விட்டீர்களா?

### கிறிஸ்துவிடம் வந்து பானம் பண்ணுங்கள்

இந்த பரிபூரணத்தைப் பெற்றுக் கொள்வது எப்படி? அந்தப் பாதை மிகவும் எளிதானது. ஆனால் மனிதன் சில வேளைகளில் இதைச் சிக்கலாக்கி விடுகிறான். தேவனுடைய பாதை எது? இந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்: "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ..." (யோவா.4:14). இது தான் செயல்படும் பொருத்தமான ஈவு. "இயேசு ... சத்தமிட்டு ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்"(யோ. 7:37) என்றார்.

இதைவிட எளிதான வழி உண்டா? இந்த வாக்கியத்தின் எந்த பதத்தின் பொருளையும் அறிந்து கொள்ள எந்த அகராதியும் தேவையில்லை. நமது வாழ்வில் ஒவ்வொரு நாளும் பயன்படுத்தும் வார்த்தைகள் மிகவும் எளிதாயிருப்பதால் நாம் தவறி விடுகிறோம்.

தாகமாயிருக்கிறவர்கள் யாரென்றாலும் அவரிடத்தில் வரலாம். நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிகிற யாராயிருந்தாலும் அவர்கள் பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் யார்?

'தாகம்', இது என்னிடமில்லாததை நான் பெற்றுக் கொள்ள அல்லது பொறாமையால், பேராசையால், ஒரு வல்லமையை ஏதோ ஒருவருடைய வாழ்வில் கண்டு பெற்றுக்கொள்ள விரும்புவதல்ல. கிறிஸ்துவுக்காக தூய்மையைப் பெற்றுக் கொள்ளும் மிகுந்த ஆவல், அது திருப்திபண்ணப்படும். ஆண்டவருக்காக சாட்சியாயிருப்பதற்காக ஏற்படும் அதிக வாஞ்சை தணிக்கப்படும். ஆத்துமாக்கள் மீதுள்ள பாரம். 'தாகம்' என்ற பதத்தில் மறைந்திருக்கும் இன்னொரு கருத்து, தேவனுக்காகவே ஏற்படும் தணிக்க முடியாத ஆசை. அது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படும் அழுகை. அதை சங்கீதக்காரன் 42-ம் அதிகாரத்தின் முதலிரண்டு வசனங்களில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

"மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல, தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா, தேவன் மேல் ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது."

ஒருவர் இவ்வாறு எழுதினார்: 'அவருக்காகவும் அவருடைய பரிசுத்தத்துக்காகவும் எனது தாகம் தணிக்க முடியாதது'. இவ்விதமான தாகம் உங்களுக்கு இருக்கிறதா? இதுதான் ஆவியால் நிரப்பப்படுவதற்கான முதல் நிபந்தனை. பின்பு என்ன?

'வாருங்கள் 'எங்கே? யாரிடம்? ஒரு மாநாட்டிற்கா? ஏதோ ஒரு மனித தலைவரிடமா? 'என்னிடம் வாருங்கள்' - ஒரே ஒருவர்தான் இந்த ஈவை அளிக்க முடியும். பரிபூரணமாக சுரந்து வரும் ஜீவ தண்ணீர், அவரிடம் வந்திருக்கிறீர்களா? ஒரு வேளை நீங்கள் வந்து அந்த ஈவைக் கேட்டிருக்கலாம். ஆனால் அது அவருடைய நிபந்தனையல்ல. கேட்பது தாகத்தினடிப்படையிலாயிருக்க வேண்டும். ஆசை, கேட்பதனால் வெளிப்படுத்தப்படுவது மட்டும் போதாது. இன்னும் நாம் செய்ய வேண்டியவைகளுண்டு.

### குடிக்க வேண்டும்:

இது ஒரு செயல். ஆசையால் கையாளப்பட்டு, சொந்தமாக்கிக் கொள்ளப்படுதல். 'தாகம்' என்பது ஆசை. எனக்கு தண்ணீர் வேண்டும். தண்ணீரைக் குடிப்பது ஒரு செயல். நான் தண்ணீரைக் குடிக்கிறேன். இந்த மகத்துவமான அனுபவத்தைத்தான் அனேகர் இழந்து விடுகிறார்கள். அவர்களுக்குத் தாகமுண்டு, ஆனால் அவர்கள் குடிப்பதில்லை. "...மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து" (எபேசி.5:18) ஒருவன் எப்படி மதுபான வெறி கொள்ளுகிறான்? மதுபானம் குடிப்பதால். எப்படி வெறியோடிருக்கிறான்? தொடர்ந்து மதுபானம் குடித்துக் கொண்டே இருப்பதால். ஒருவர் எப்படி ஆவியினால் நிரப்பப்படுவார்? ஜீவ தண்ணீரைக் குடிப்பதால் என்று நமது ஆண்டவர் கூறுகிறார். எப்படி நிரம்பியே இருக்க முடியும்? ஒவ்வொரு நாளும் ஜீவ தண்ணீரைக் பருகிக்கொண்டே இருப்பதால்.

உங்களுக்குத் தாகம் ஏற்பட்டு இப்போதே குடித்தால் இந்த எளிய ஜெபத்தை ஏறெடுப்பீர்களா? "ஆண்டவரே, நான் தாகமாயிருக்கிறேன், ஆண்டவரே நான் உம்மிடம் வந்து தாகம் தீர்க்கிறேன். ஆண்டவரே நீர் தரும் ஈவை எடுத்துக் கொள்கிறேன். உமது ஆவியின் நிறைவை எனக்குத் தருவீராக. அதற்காக உமக்கு நன்றி சொல்லுகிறேன்."

**முக்கிய அறிவிப்பு**

**வங்கி வழியாக (Net Banking) காணிக்கை அனுப்பிய வாசகர்கள் உடனே எங்களுக்கு Phone பண்ணுங்கள் அல்லது SMS or Whatsapp அனுப்புங்கள்.**

Cell :**95432 21008** Whatsapp :**9489740295**

# கிறிஸ்துவே - உண்மையான நீரூற்று

## CHRIST - The True Spring of Life

J.C. Ryle

**"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளை கொடுப்பான் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது"** யோவா.15:5.

இதுவரை நாம் கிறிஸ்துவில் நிலைத்திருந்ததைவிட மிக நெருக்கமாக அவரில் நிலைத்திருப்போம். அனைத்து விசுவாசிகளின் ஆத்துமாவுக்கும் அவர் ஜீவநீரூற்று. ஒவ்வொரு அங்கமும் சார்ந்திருக்கும் தலை. அனைத்து தூய்மைப்படுத்துதலுக்கும் மூலைக்கல். ஏதேனும் ஒரு தேவ பிள்ளை முன்பு இருந்ததை விட பரிசுத்தக் குறைவுடன் காணப்பட்டால், அதன் இரகசியம் எனக்குத் தெரியும். அவன் முந்தி கிறிஸ்துவைப் பற்றிப்பிடித்தது போல இப்போது பிடிக்கவில்லை. கனியைத் திரளாய்ப் பெற வேர் சரியாயிருக்க வேண்டும்.

சகோதரரே, கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்திலும் அந்நியோந்நியத்திலும் முன்னேற வேண்டும். அதற்காக அவரிடம் அடிக்கடி சென்று, முழுவதுமாக அவரை நம்பி, அடிக்கடி அவர் முகத்தை நாடி அவரையே முற்றிலும் சார்ந்து கொள்ள வேண்டும். வனாந்திர யாத்திரையில் மூர்ச்சையடையாமல் பொறுமையோடே ஓட இதுவே வழி. விசுவாசத்தின் வாழ்வை வாழுவோம். தேவகுமாரனே நமது நம்பிக்கை. அவர் திராட்சச்செடி நாம் கொடிகள். நமது பெலன் எல்லாம் அவரிலிருந்து உறிஞ்சி எடுக்கப்பட வேண்டும். அவரிலிருந்து பிரிந்துவிட்டால் நாம் ஒன்றும் செய்யக் கூடாது. அவர் நீதியின் சூரியன். நாம் நமது ஆறுதலை அவரிடமிருந்து பெறுவோம். நமது பெலன் நமது உணர்ச்சிகளில் நாம் சாராதிருப்போமாக.

அவர் ஜீவ அப்பம். இஸ்ரவேலர் மன்னாவை தினம் தினம் புசித்தது போல அவரை உட்கொள்வோம். நமது அனுபவங்கள் வேண்டாம். அவரே நமக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருக்கட்டும். அவரது இரத்தம் நமக்கு சமாதானமும், அவரது மன்றாட்டு நமது ஆறுதலும், அவரது வார்த்தை நமக்கு அதிகாரப் பத்திரமும், அவரது கிருபை நமக்கு பெலனும், அவரது இரக்கம் நமது ஆதரவும், அவரது விரைவான வருகை நமது நம்பிக்கையாகவுமிருக்கட்டும். மற்றவர்கள் புதிய புத்தகங்களைப் படிக்கட்டும், நாமோ கிறிஸ்துவைக் கற்றுக் கொள்வோம்.

கிறிஸ்துவை நமது இரட்சகராக சிறிதளவு அறிவோம். அவரில் இருக்கும் நிறைவில் ஒரு சிறுபகுதி மட்டும் நாம் கண்டிருக்கிறோம். அவருடைய இல வசமும் ஆசீர்வாதமானதுமான முழு பாவமன்னிப்பினை நாம் உணராவிட்டால் நமது முத்திரை வேறுபட்டது. பரிகாரத்தின் இரத்தம் மனச்சாட்சியில் தெளிக்கப்பட்டு, தான் கழுவப்பட்டதனையும் நேசரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதையும் உறுதி என இருப்பவன் உண்மையாகவே பரிசுத்தமுடையவனும் கனி கொடுக்கிறவனுமாயிருப்பான். அவன் மகிழ்ச்சியோடு உழைப்பதும், பொறுமையாக பாடுகளை சகிப்பதும் உறுதியாக சாட்சியாயிருப்பதும் தொடர்ந்து முன்னேறுவதும் அன்போடு வாழ்வதும் நிச்சயம். மீட்பு எப்போதும் புதுமையாக அவனது மனதிலிருக்கும். அவனுடைய எண்ணம்: "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்" (சங்.116:12) என்றேயிருக்கும்.

சகோதரரே, நாம் கிறிஸ்துவை நெருக்கமாகக் கிட்டிச் சேருவோம். சிலுவைக்கு மிக அருகாமையில் வருவோம். இயேசுவின் பாதத்தில் அமருவோம். "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று கூறிய அப்போஸ்தனைப் போல வாழ முயற்சிப்போம்.

# ஆவியால் பெலப்படுத்தப்பட்ட குடும்பங்கள்

## Spirit empowered families

Kim Butts

விசுவாசக் குடும்பங்கள் தாங்கள் ஆவியால் நிரப்பப்பட்ட வாழ்வால் தூய ஆவியானவரின் வரங்களையும் கனியையும் வெளிப்படுத்தி தேவ பணிக்காக முற்றிலும் வல்லமைப் படுத்தப்பட்டுவிட்டால் ஆண்டவராகிய இயேசுவின் சபை ஏற்படுத்தும் தாக்கத்தை எண்ணிப்பார்க்க முடியாது. தூய ஆவியானவரின் வல்லமையால் இது சாத்தியம் என்பதை வேதபுத்தகம் உறுதிப்படுத்துகிறது.

நமது பரம பிதா தமது ஜனத்தின் இருதயங்கள், உள்ளங்கள், ஆவிகள் ஆகிய வற்றின் மேல் அக்கரையுடையவர். அவர் தமது ஆவியை வயது, பாலினம் என்ற வேறுபாடின்றி அனைத்து விசுவாசிகள் மீதும் ஊற்றுவது தெளிவு. அதற்குப் பின்பு நான் மாம்சமானயாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்வார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். யோவேல் 2:28,29. இதன் கருத்து என்னவென்றால் உங்கள் குடும்பம் முழுவதும் அவருடைய வல்லமையான செயல்களில் ஈடுபடும் என்பதே. உங்கள் குடும்பத்திலுள்ள பெரியோர்களை விட இளம் வயதினர் தேவனது காரியங்களைப் புரிந்து கொள்வதில் மட்டமானவர்கள் என்று எடை போட வேண்டாம். தேவன் சிறு குழந்தைகளிலும் கூட தமது ஆவியை ஊற்றக்கூடியவர்.

# என்றென்றும் ஜீவித்திருக்கும் நமது மன்றாட்டு வீரர்

Our ever living Intercessor

Charles H. Spurgeon (1834 - 1892)

"மேலும் தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" எபி.7:25.

அவர் வேண்டுதல் செய்கிறவராக எப்பொழுதும் உயிரோடிருக்கிறார். கிறிஸ்து தமது வாழ்நாள் முழுவதும் நித்தியம் வரைக்கும்,- அவரது எல்லையற்ற, முடிவில்லாத மகிமையின் பிரசன்னம் - அவரது ஜனங்களுக்கு உண்டு. "அவர் என்னை நேசித்துத் தன்னை எனக்காகத் தந்தார்" என்பது உண்மை. இதை நிகழ்காலத்திலும் வாசிக்கலாம், ஏனெனில் இன்றும் அது சத்தியம். கிறிஸ்து சபையை நேசித்து அதற்காகத் தம்மையே கொடுத்தார். இன்னும் அவர் தமது சபையை நேசித்து அதற்காகத் தனது ஜீவனைக் கொடுக்கிறார். நமக்காக கிறிஸ்துவின் முடிவற்ற ஜீவன் எத்தனை தூண்டுதலாயிருக்கிறது. அவர் நமக்காக முழுவதுமாய் வாழுகிறபடியால் நாமும் அவருக்காக முழுவதுமாக வாழுவோம்.

ஜீவனுள்ள கிறிஸ்துவைப் பற்றிய இந்த சத்தியம் நமது மிகப் பெரிய தேவைகளில் நினைவுகூரப்பட வேண்டும். நண்பர்களே, நமக்கு ஒரு சர்வ வல்ல தேவன் உண்டு. நமது உயரிய நன்மைகளுக்காக அவர் எப்போதும் பரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். நாம் அவரை மிகவும் அன்போடு வணங்குவோம். நமது பெரிய தேவை எவ்வளவு என்பதையும் அதற்கு நமக்கு எப்போதும் ஒரு ஜீவனுள்ள இரட்சகர் நமக்காக உதவியாக இருக்க வேண்டும் என்பதையும் காண்பிக்க வேண்டும். மரிக்கிற ஒரு இரட்சகர் நமக்கு போதுமானவரல்ல. ஒவ்வொரு நிமிடமும் நமது வாழ்வில் நமது ஆவியையும், எல்லா விதமான வழிகளையும் கவனித்து எல்லாத் தீமைகளிலிருந்தும் விடுவிக்கிறவராயிருக்க வேண்டும். நமது தேவையின் வேளை எப்போதும் இருந்துக் கொண்டே இருக்கிறது. இயேசு நம்மைப் பாதுகாத்துக் கொண்டே இருக்கிறார். அவரது பணி மேற்பூச்சானது அல்ல. நமது பாரங்கள் அதிகரித்து நமது தோள்களை அழுத்தும் போது நமது பெரிய ஆறுதலாக அது இருக்க வேண்டும். இயேசு ஜீவிக்கிறார். எனது மிகப் பெரிய இரட்சகர், எனக்காக முழு நிறைவோடும் வல்லமையோடும், மகிமையோடும் வாழ்ந்து எனது ஆத்துமாவை எல்லாத் தேவைகளிலுமிருந்து விடுவிக்கிறார். நான் இதை நம்ப வேண்டாமா? இப்படிப்பட்ட ஒரு பாதுகாவலரிருக்க நான் ஏன் பயப்பட வேண்டும்? என்னுடைய பாதுகாவலுக்காக அவர் விழிப்போடும் சுறுசுறுப்பாகவுமிருக்கும் போது நாம் பாதுகாவலாயிருப்பது நிச்சயம். இயேசு நமக்காக தமது ஜீவனையேக் கொடுக்கும் போது நாம் அவருக்காக வாழ வேண்டாமா? அவரது ஆசீர்வாதங்கள் எத்தனை!

அன்பானவர்களே, இங்குதான் நமது ஆறுதல் இருக்கிறது. நமக்கு ஒரே ஒரு பிரதான ஆசாரியர் இருக்கிறார். அவர் எப்போதும் ஜீவிக்கிறவர். அவருக்கு முன்னிருந்தவருமில்லை, அவருக்கு பின்வருவாருமில்லை. அவரே நமக்காகப் பிரதான ஆசாரியர் பதவியை வைத்துக் கொண்டிருக்கிறார். அவரது ஒரே பலியில் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். அந்த பலியை நடத்துகிறவர் அவர் ஒருவரே. அவர் போதுமானவர். அவர் ஒரு போதும் மரிப்பதில்லை. இயேசு என் இருதயத்தை நன்கு வாசிக்கிறவர். அது துடிக்க ஆரம்பித்த நாளிலிருந்தே அவர் எப்போதும் வாசித்துக் கொண்டிருக்கிறார். அவர் என் துக்கங்களை அறிவார். அவற்றை முன் நாளிலிருந்தே அவற்றையும் என்னையும் சுமக்கிறார். எனது வயோதிபகாலம் எனக்குப் பலவீனத்தைத் தரும் போதும் அப்படியே செய்வார். நான் மரணத்தில் என் கண்களை மூடும் போதும் அவர் கண்மூடாமல் மரிக்காத அவரது ஆசீர்வாதத்திற்குள் சேர்த்துக் கொள்வார். கிறிஸ்துவின் இவ்வித தொடர் ஆசாரியத்துவத்துக்காக மகிழ்ந்து களிகூறுவோம்.

## தொடர் மன்றாட்டின் தேவை

நமது இயற்கையான பெலவீன பாவநிலைகளிலிருந்து தொடர்ந்து பாதுகாக்க, பரிந்து பேச ஒருவரில்லாவிடில் நமது நம்பிக்கை என்ன? பாதை கரடுமுரடானது, உலகம் பாவம் நிறைந்தது. நமது அலைச்சல்கள் அனேகம். நமது தேவைகள் எண்ணிலடங்காதவை. எனவே நமக்கு நித்திய மான மன்றாட்டு தேவை. நாம் எப்போதும் ஆபத்திலிருக்கிறோம். எனவே பாதுகாக்கும் ஜெபம் தேவை. எப்போதும் பலவீனத்திலும் குற்றங்களிலுமிருக்கிறோம். எனவே பாதுகாவலின் தொடர் அரவணைப்பு வேண்டும். உங்களில் குறைவில்லாத எந்த மனுஷனாகிலும் உண்டா? ஒவ்வொரு நாளும் பல தடவைகள் இரக்க ஆசனத்தின் முன் வருவதற்குத் தேவைகளில்லாத எந்த மனுஷியாகிலும் உண்டா? இயேசு நமது விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள அங்கு வீற்றிருக்கிறார். ஒவ்வொரு நாளும் பாவத்தினாலோ, சரீர பாடுகளினாலோ, சுவிசேஷப் பணியிலோ, சகோதரருக்கான மன உருக்கத்திலோ, நெருக்கப்பட்டு பரிசுத்த ஸ்தலத்தின் உதவியை நாடுகிறவர்களாயிருக்கிறோம். அவர் ஒருவரே பரம சிங்காசனத்திலிருந்து இறங்கி வந்து உதவி செய்ய முடியும். அவர் ஒருவரது பாதபடிகளில்தான் நமது பாரங்களை வைக்க முடியும். அவரது காதுகளில் தான் நமது தேவைகளைக் குறிப்பிட முடியும். இயேசு ஒருவரே நமது மன்றாட்டுவீரராக எப்போதும் ஜீவித்திருக்கிறார்.

## எண்ணிலடங்காத ஆசீர்வாதங்கள்

நம்முடைய வளர்ச்சிக்கும் நாம் பயன்படுவதற்கும் தேவையான ஈவுகளையும் கிருபைகளையும் அவர் பெற்றுத் தருகிறார். ஆவிக்குரிய வாழ்வுக்கும் அவரது கரமே உதவியாயிருக்கிறது. ஆவிக்குரிய வாழ்வுதான் உலகில் சேவை செய்யவும் வரப்போகிற பரலோக வாழ்வுக்குரிய தகுதியையும் தருகிறது. அவர் ஏறெடுக்கும் மன்றாட்டுகள் இல்லாவிடில் தேவ ஆவியானவர் நம்மைப் பூரணப்படுத்தி நற்கிரியைகள் செய்து அவர் சித்தத்தை நிறைவேற்றி நம்மால் எட்டிப்பிடிக்க முடியாத உயர் பண்புகளை பெற முடியாது.

ஒரு சத்துரு எப்போதும் உயிரோடிருந்து பொறுமையோடு நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை மறந்து போக வேண்டாம். அவன் தேவனிடம் தேவபிள்ளைகளைக் குற்றம் சாட்டிக் கொண்டேயிருக்கிறான். நமது அருமை ஆண்டவர் நமக்காகப் பரிந்து பேசாவிட்டால் என்ன நிகழும். குற்றம் சாட்டுகிற பிசாசு ஒரு சோதனைக்காரனும் கூட. நம்மைக் கீழடக்குவதற்காக அவன் தந்திரமாக செயல்படுகிறான். இது சீமோனுக்கு வந்தது போன்ற சோதனை: "பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போல, சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு, உனக்காக வேண்டிக் கொண்டேன்" (லூக்.22:31-32). எத்தனை முறைகள் இயேசுவினுடைய ஜெபங்களால் நாம் தீமையிலிருந்து மறைக்கப்படுகிறோம். எத்தனையோ விஷ அம்புகள் ஆண்டவருடைய மன்றாட்டாகிய கேடயத்தைத் தாக்கியுள்ளன. அவருடைய மன்றாட்டுகள், ஆயிரம் கரங்கள் போல ஆசீர்வாதங்களைப் பொழிகின்றன.

"நீ சமுத்திரத்தின் அடித்தளம் மட்டும் புகுந்ததுண்டோ?" யோபு 38:16 என்று கர்த்தர் கேட்கிறார். நமது ஆண்டவரின் மன்றாட்டு கடலளவு ஆசீர்வாதமானது. தூய ஆவியால் நமது கண்கள் பிரகாசமடைந்தால் தேவ ஜனத்தைச் சுற்றிலும் அக்கினி இரதங்களும் அக்கினிக் குதிரைகளும் காணலாம். அந்தக் குதிரைகளை நடத்துவது யார்? இந்த இரதங்களுக்கு வழிக்காட்டுவது யார்? தேவனுடைய பாளயத்தைச் சுற்றிலும் ஆவியின் சேனைகளின் தலைவராய் பாதுகாப்பவர் யார்? அந்த இளவரசராகிய இம்மானுவேல் தமது வல்லமையுள்ள மன்றாட்டின் மூலம் இவைகளை செய்கிறார்.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டவராகிய இயேசு தமது இடைவிடாத வேண்டுதலின் மூலம் அந்தகார சக்திகளையெல்லாம் கட்டுப் படுத்தி, நமது மீட்புக்காக அனைத்து ஒளியின் வல்லமைகளையும் திறந்த ளிக்கிறார். அவரது ஜெபங்கள் ஆசீர் வாதத்தின் சூழல்களை ஏற்படுத்துவ தால் அதற்குள்ளே நாம் வாழவும் அசை யவும் முடிகிறது. நாம் நமது மன்றாட்டு வீரரின் இடைவிடாத கரிசனை, களைப்பில்லாத ஜெபம் ஆகியவற்றை அறிந்து கொள்ளவோ,கணக்கிடவோ, ஆழத்தை அளக்கவோ முடியாது. காலம் முடிவடையும் போது அனைத்து பரிசுத்தவான்களும் இரட்சிக்கப்படும் போது அவரது மன்றாட்டின் மூலம் அவருடைய ஆசீர்வாதத்திற்குள் நுழைவது நிச்சயம்.

## நமது உயர்வான மற்றும் பரிசுத்த அழைப்பு

**Our High and Holy calling**

Lois.J.Stucky

அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் சபைகளை ஸ்தாபித்து அவை களைப் பரிசுத்தப்படுத்த பயன்படுத்தி னார். விசுவாசிகளுக்கு அவர் நிருபம் எழுதும் போது அவர்களை 'பரிசுத்த வான்கள்' என்று குறிப்பிடுகிறார். ரோமிலுள்ளவர்களுக்கு "தேவ பிரிய ரும் பரிசுத்தவான்களாகும் படி அழைக் கப்பட்டவர்களுமாகிய அனைவருக் கும் எழுதுகிறதாவது" ரோ.1:7 கொரிந்து சபைக்கு எழுதும் போது,"...பரிசுத்த மாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்த முள்ளவர்களாகும்படி அழைக்கப்பட் டவர்களுமாயிருக்கிற..." என்கிறார் (1 கொரி.1:2). அகாயாவிலுள்ளவர்களை 2 கொரி.1:1-ல் 'பரிசுத்தவான்களுக்கு' எனக் குறிப்பிடுகிறார். எபேசி.1:1-ல் பவுல் 'எபேசுவிலுள்ள பரிசுத்தவான் களுக்கு' என்று ஆரம்பிக்கிறார். பிலிப் பியிலுள்ளவர்களுக்கு 'பிலிப்பி பட்ட ணத்தில்... பரிசுத்தவான்கள் அனை வருக்கும்' என எழுத ஆரம்பிக்கிறார் (பிலி.1:1). கொலோசேயருக்கு எழுதிய நிருபத்தில் 'கொலோசே பட்டணத்தில் ... பரிசுத்தவான்களுக்கும் விசுவாசிகளா யிருக்கிற சகோதரருக்கும்' கொலோ.1:2 என்றெழுதுகிறார்.

அனைத்து விசுவாசிகளையும் பவுல் பரிசுத்தவான்கள் என்கிறார். அத னால் அவர்களுடைய நடத்தைகளெல் லாம் பரிசுத்தமானது என எண்ண முடி யாது. இந்த சபைகளிலுள்ள சில விசுவாசிகளின், கவனக்குறைவானதும், பாவமானதுமான நடக்கைகளால் வேத னைப்பட்டு கண்ணீர் விட்டிருக்கிறார். ஆனால் தேவன் அவர்களை 'பரிசுத்த வான்கள்' என்ற எண்ணமுடையவரா யிருக்கிறார் என்பதை நினைவுகூர்ந்து இப்படி எழுதுகிறார்.

தங்கள் அழைப்புக்குப் பாத்திர ராய் நடக்க விரும்பியவர். அப்.பவுல். அவர் தம்மைக்குறித்து, "கிறிஸ்து இயேசுவுக்குள், தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" பிலி.3:14 என்கிறார். தீமோத்தேயுவுக்கு எழுதும் போது "அவர் நம்முடைய கிரி யைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படி யும் நம்மை இரட்சித்து பரிசுத்த அழைப் பினாலே அழைத்தார்" 2தீமோ.1:9 என்றெழுதுகிறார். தெசலோனிக்கேயருக்கு எழுதும் போது, "மேலும் தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திர ராய் நடக்க வேண்டுமென்று, தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல, நாங்கள் உங்களில் ஒவ்வொரு வருக்கும் புத்தியும், தேறுதலும், எச்ச ரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர் களே" 1தெச.2:11-12.என்றும் எழுது கிறார்.

எபிரேயர் நிருபத்தில் 'பரம அழைப்பு' எபி.3:1 என்று இது அழைக் கப்படுகிறது. ஏறக்குறைய 3 ஆண்டுகள் இயேசுவோடு வாழ்ந்து அவருடைய உதடுகளின் வார்த்தைகளை நேரடி யாகக் கேட்ட பேதுரு,"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைக ளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயி ருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" 1பேது.1:15-16 வசனங்களில் குறிப்பிடுகிறார். மேலும் "தம்முடைய மகிமையினாலும் காருண் யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே தேவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற் றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளி னது" என்றும் "ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி.." என்றும் தொடருகிறார் 2 பேதுது1:3,10.

இயேசுவுக்கு மிகவும் அன்பான அப்போஸ்தலன், எழுதுவதை 1யோ. 3:1-3 வசனங்களில் வாசியுங்கள்.

விசுவாசிகளே, அவர் நம்மை அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளிக்குள் வரவழைத்தார் 1 பேதுரு2:9. அவரது அழைப்பைக் கேட்கும் காதுகள் நன்றியுடையவைகளாயிருக்க வேண்டுமே. அதற்குக் கீழ்ப்படிவது எவ்வளவ அவசியம்! அவரது அழைப்பு தூய வாழ்வுக்கும், எப்போதும் அவரை சந்திக்க ஆயத்தமாயிருக்கவும் அல்லவா? எபேசி.5:27-ன்படி "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான, மகிமையுள்ள சபையாக நிற்க வேண்டுமே... விசுவாசத்தினாலே தேவன் நமது இருதயங்களை சுத்திகரிக கிறார்" அப்.15:9. நம்மில் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியினாலே பாவ மாகிய பழைய மனுஷனைக் களைந்து போட்டு "அவருடைய சாயலுக் கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரிப்பிக்கிறார்" கொலோ.3:10.

அப். பவுலைப் போல ஆண்ட வருக்காகவும், அவருடைய நோக்கம், பிரியம் ஆகியவற்றிற்காகவும் தகுதி யுள்ளவர்களாக நடப்போம். மனி தருக்கு முன்பாகப் பரிசுத்தவான்களாக அல்ல, தூய ஆவியால் நிறைந்து பணி வோடு, இல்லத்திலும், சபையிலும், வேலை செய்யுமிடத்திலும் எந்த இடத் திலும் சேவை செய்ய தேவன் நம்மை நடத்துவாராக.

பாவத்தைத் தள்ளிவிடுவோம். தொடர்ந்து ஊக்கமான முயற்சியுடன் அவரது உயரிய, பரிசுத்த, பரம அழைப் புக்கு நேராகச் செல்லுவோம். அவரது மகிமைக்காகவும், அவரது திட்டத்தை நிறைவேற்றவும், அழிந்துபோகும் திரளான ஆத்துமாக்கள் மகிமையில் சேர்க்கப்படவும் முயற்சிப்போம் 1 பேதுரு.5:10.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

**சிந்தனைக்கு**

**பரிசுத்த வேதாகமம்** ஒரு தேன்கூடு. 'லூக்கா சுவிசேஷம் தேன் இட்ட பணியாரம்'

அவர் நம்மை **நிரப்ப** இருதயத்தில் அறியப்பட்ட எல்லா பாவமும் அகற்றப்பட்டு **சுத்தப்**படுத்தப்பட வேண்டும்.

**நிரப்பப்**படுவதற்கு தடையாக இருக்கும் இரண்டாவது காரணம் **அர்ப்பணிக்கப்**படாத வாழ்வு.

அவர் **ஜீவ அப்பம்**. இஸ்ரவேலர் மன்னாவை தினம் தினம் புசித்தது போல அவரை உட்கொள்வோம்.

நாம் நமது **மன்றாட்டு** வீரரின் இடைவிடாத கரிசனை, களைப்பில்லாத **ஜெபம்** ஆகியவற்றை அறிந்து கொள்ளவோ, கணக்கிடவோ, ஆழத்தை அளக்கவோ முடியாது.

அவரது **ஜெபங்கள்** ஆசீர்வாதத்தின் சூழல்களை ஏற்படுத்துவதால் அதற்குள்ளே நாம் வாழவும் அசையவும் முடிகிறது.

*Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.*
*Editor : Wesley Devadason*